**04.10.2024**

**CC No. 331/2022**

A1- A4 produced. A5 present.

**PW.3 - திரு.முருகன்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**2-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவில் முதல்நிலைக் காவலராகவும், சிறப்புசார்பு ஆய்வாளராகவும் எத்தனை ஆண்டுகள் பணிபுரிந்துள்ளீர்கள் என்றால் தலைமைக்காவலராக 2 1/2 ஆண்டுகளும், சிறப்பு உதவி ஆய்வாளராக 1 வருடமாகவும் பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு குறித்து ஆய்வாளர் என்னை எந்த தேதியில் விசாரித்தார் என்றால் 08.10.2021 ம் தேதியும், 12.01.2021 ம் தேதியும் விசாரித்தார். எத்தனை மணிக்கு விசாரணை செய்தார் என்று ஞாபகம் இல்லை. மதியம் என்னை விசாரணை செய்தார். அப்போது என்னிடம் வாக்குமூலம் கேட்டு எழுதிக்கொண்டாரா என்றால் சரிதான். அந்த வாக்குமூலத்தில் எந்த ஒரு இடத்திலும் 2,3,4 எதிரிகள் இருந்ததாகவோ, அவர்களை கைதுசெய்ததாகவோ, அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவோ இல்லை என்றால் சரிதான். கவர்களில் பல்வேறு வடிவத்திலும், நிறத்திலும் உண்டு என்றால் சரிதான். பாலிதீன் பைகளிலும் பல்வேறு வகைகள் உண்டு என்றால் சரிதான். என் முன்னர் மாதிரி எடுக்க பயன்படுத்தப்பட்ட பாலிதீன் கவர்ம மற்றும் காக்கி காகித உறை ஆகியவற்றிற்கு சிறப்பு அடையாளங்கள் உண்டா என்றால் இல்லை. அவை சாதாரணமானவை தான். என் முன்னர் எந்த மாதிரியும் எடுக்கப்படாத காரணத்தால்தான் பாலிதீன் கவரின் வகைகளோ, காகித உறைகளின் வகைகளோ சொல்ல இயலாது என்றால்

சரியல்ல. வெள்ளைநிற சாக்கின் வகைகள் குறித்து என்னால் அரிதியிட்டுக் கூறமுடியாது என்றால் சரிதான். நான் பார்வையிட்ட சாக்குப்பை தைக்கப்பட்டிருந்ததா அல்லது கட்டப்பட்டிருந்ததா என்றால் கட்டப்பட்டிருந்தது. நான் பார்த்தபோது அதில் ஏதேனும் முத்திரை பதிக்கப்பட்டிருந்ததா என்றால் இல்லை. என்னுடைய காவல்நிலையத்தில் பொதுநாட்குறிப்பு உண்டு. அதை பராமரிக்க பொறுப்பு அதிகாரி உண்டு என்றால் சரிதான். 08.10.2021 ம் தேதி காலை 7.00 மணி முதல் யார் அன்றைய பொறுப்பதிகாரியாக இருந்தார் என்றால் அன்று காவல் நிலைய பொறுப்பதிகாரியாக எங்கள் நுண்ணறிவு பிரிவு காவல் ஆய்வாளர் இருந்தார். அன்று பெண் சார்பு ஆய்வாளர்-அனிதாவேணி காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு வந்தார் என்றால் காலை 7.00 மணிக்கு வந்தார். அன்று அவர் நிலைய பொறுப்பு அதிகாரியாக செயல்படவில்லை என்றால் சரிதான். தராசுகளில் பல்வேறு வகைகள் உண்டு என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் என்ன வகையான தராசு உள்ளது என்றால் இரண்டுவகையான எலக்ட்ரானிக் தராசுகள் உள்ளது. எலக்ட்ரானிக் தராசுகள் தவிர எங்கள் காவல்நிலையத்தில் வேறு தராசுகள் இல்லை. நான் சொன்னபடி, சொன்ன நேரத்தில் என் முன்னர் 2 வது எதிரி கைதுசெய்யப்படவில்லை என்றாலும், என் முன்னர் சோதனைக்கு மாதிரி எடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் நீண்டகாலமாக நுண்ணறிவுப்பிரிவில் அரசு பணியில் இருப்பதால் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகளை கைது செய்த பின்னர்தான் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் தனியாக வேறு பொருட்கள் எதுவும் கைப்பற்றப்பட்டதா என்றால் கைப்பற்றப்படவில்லை. எங்கள் காவல்நிலையத்திற்கும் தூத்துக்குடி, நீதித்துறை நடுவர்

நீதிமன்றத்திற்கும் எத்தனை கிலோமீட்டர் தொலைவு இருக்கும் என்றால் சுமார் 2 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். நான் கையொப்பம் இட்டதாக சொல்லும் அத்தாட்சியில் கியூபிராஞ்சை சேர்ந்த அதிகாரிகள் யாரும் கையொப்பம் இட்டார்களா என்றால் இல்லை. நான் கையொப்பம் இட்ட அத்தாட்சியில் NIB சீல் பதிவு செய்யப்பட்டதா என்றால் பதிவு செய்யப்பட்டது. போதைப்பொருள் தடுப்புச் சட்டப்படி எதிரிகளுக்கு கைதுசெய்வதற்கு முன்னர் கைது நமூனா சார்பு செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரிகளை கைது செய்வதற்கு முன்னர் எதிரிகளின் உடலில் காயங்கள் உள்ளதா என்று ஆய்வு நமூனா தயார் செய்யப்பட்டதாக என்றால் சோதனை செய்தோம் ஆனால் ஆய்வு நமூனா தயார் செய்யப்படவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னபடி சொன்னநேரத்தில் , வழக்கின் 3ம் எதிரியை நான் பார்க்கவும் இல்லை என்றாலும் என் முன்னர் ஒப்புதல் வாக்குமூலம் எந்த எதிரியும் கொடுக்கவில்லை என்றாலும் அத்தாட்சியில் பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் நான் கையொப்பம் இட்ட ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்கள் அந்த ஆவணங்களில் கையொப்பமிட்டு அதனை அனுசரித்து உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>4ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை- 1,2,3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக சொல்லப்பட்டது.</u>

<u>5 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

5ம் எதிரியிடமிருந்து எந்த ஒரு போதைப்பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். மற்ற எதிரிகளிடமிருந்து 5ம் எதிரியின் சம்பந்தப்பட்ட

எந்த ஒரு பொருளும் என் முன்பு கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 5ம் எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றது குறித்து ஆய்வாளர் என்னிடம் விசாரணை வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றும் அதனால் தான் அந்த விசாரணை வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 5ம் எதிரிக்கும் மற்ற எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் செல்போனுக்கும் இந்த எதிரிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.